செ.வெ.எண்:790 நாள்:17.11.2019

**கூட்டுறவுத்துறை ரூ.54,000 கோடி வைப்புத் தொகையுடன் மக்களின் நம்பிக்கை பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது.**

**கூட்டுறவு சங்கங்களின் மூலமாக தமிழகத்தில் கடந்த 8 ஆண்டுகளில் 87,89,930 விவசாயிகளுக்கு ரூ.46,350 கோடி வட்டியில்லா பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது.**

**கூட்டுறவு வார விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகர்மன்றத்தில் இன்று (17.11.2019) கூட்டுறவுத்துறையின் சார்பில் மாவட்ட அளவிலான 66 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு 2,608 பயனாளிகளுக்கு ரூ.21 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் கூட்டுறவுத்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வரும் காரணத்தால் தற்பொழுது கூட்டுறவுத்துறை ரூ.54,000 கோடி வைப்புத் தொகையுடன் மக்களின் நம்பிக்கை பெற்று செயல்பட்டு வருகிறது. இதன் பயனாக கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 31.10.2019 வரை 87,89,930 விவசாயிகளுக்கு ரூ.46,350 கோடி வட்டியில்லா பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.10,000 கோடி வட்டியில்லா கடன் வழங்க உத்தரவிட்டு, இதுவரை 6,31,308 விவசாயிகளுக்கு ரூ.4,550 கோடி வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 21,355 விவசாயிகளுக்கு ரூ.110 கோடி வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் தொகை பெற்று வழங்குவதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அந்த வகையில் தமிழகத்தில் 26,14,926 விவசாயிகளுக்கு ரூ.6,120 கோடி காப்பீட்டு தொகையாக பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் 1,08,707 விவசாயிகளுக்கு ரூ.274 கோடி காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் 15,899 விவசாயிகளுக்க ரூ.1,776 கோடி சிறுதொழில் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சிறப்பான செயல்பாட்டால் ஆண்டு வருமானவரி கட்டும் வகையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

எனவே கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகள் நலனுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும். இவ்வாறு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசியதாவது.

கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சிறுதொழில் கடன், அரசின் நலத்திட்டங்கள், வங்கி சேவைகள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கப்படுவதன் மூலமும் குறைந்த வட்டியில் பிற கடன்கள் வழங்கப்படுவதன் மூலம் ஏழை, எளிய மக்களின் முன்னேற்றத்தில் கூட்டுறவு வங்கிகள் முக்கிய பங்கு வகிக்கிறது.

அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்ட அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மகளிர் சுயஉதவிக் குழுக் கடன், பயிர்கடன், மத்திய கால விவசாய கடன், சிறுவணிகக் கடன், டாம்கோ கடன் என மொத்தம் 2,618 பயனாளிகளுக்கு ரூ.21 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குழந்தை பருவம் முதலே சிறுசேமிப்பின் அவசியத்தை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் சிறுவர், சிறுமியருக்கான "வானவில்" சிறுசேமிப்புத் திட்டம் இங்கே தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் விபத்தில் தங்களது கால்களை இழந்த 2 நபர்களுக்கு அதிநவீன செயற்கை கால்கள் ரூ.2.39 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கூட்டுறவின் முக்கியத்துவத்தினை உணர்ந்து இதுபோன்ற எண்ணற்ற பல திட்டங்களால் பொதுமக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடைய தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி அவர்கள், திரு.பா.ஆறுமுகம் அவர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி அவர்கள், மண்டல இணைப் பதிவாளர் திருமதி.உமாமகேஸ்வரி, இணை பதிவாளர் ம.தீபாசங்கரி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் பழனியாண்டி, மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் பழனியாண்டி உள்ளிட்ட கூட்டுறவு சங்கத் தலைவர்கள், அரசு அலுவலர்கள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் புதுக்கோட்டை.**